**பத்திரிக்கை செய்தி**

**"கேலோ இந்தியா தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள்"**

2016-2017-ம் ஆண்டிற்கான தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள் 31.01.2017 முதல் 05.02.2017 வரை சென்னை ஜவஉறர்லால் நேரு விளையாட்டு அரங்கிலும், உள் விளையாட்டு அரங்கிலும் நடத்தப்படுகிறது. இதில் டேக்வோண்டோ மற்றும் கையுந்துபந்து ஆகிய விளையாட்டுக்களில் இருபாலருக்கும் நடத்தப்படவுள்ளது. இதில் 14 மற்றும் 17 வயதிற்குட்பட்ட விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொள்கின்றனர். இந்த விளையாட்டுப் போட்டியில் இந்தியாவின் 20 மாநிலங்களிலிருந்தும் சுமார் 950 விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் அணி மேலாளர்கள் கலந்து கொள்கின்றனர்.

இந்த தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளின் துவக்க விழா 31.01.2017 அன்று மாலை 3.00 மணியளவில் சென்னை ஜவஉறர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு பள்ளிக் கல்வி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கான விளையாட்டு போட்டிகளை துவக்கி வைத்தார்கள். இந்நிகழச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு முதன்மைச் செயலர் முனைவர். ராஜேந்திர குமார், இ.ஆ.ப. அவர்கள் வீரர்கள் மற்றும் வீராங்கனைகளின் அணிவகுப்பு மரியாதையினை ஏற்று போட்டிகளை துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய முதன்மை செயலர்/உறுப்பினர் செயலர். திரு அசோக் டோங்ரே இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். மத்திய விளையாட்டு மற்றும் இளைஞர்நல அமைச்சக திட்ட அலுவலர் திரு. கன்வல்ஜித் சிங் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சிக்கு விளையாட்டு மேம்பாட்டு துறையின் உயர் அலுவலர்கள் அனைத்திந்திய விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொண்டனர். தேசிய அளவிலான விளையாட்டு போட்டிகள் தொடர்ந்து நேரு உள் விளையாட்டரங்கம் மற்றும் நேரு விளையாட்டரங்கத்தில் நடைபெற்று வருகிறது.

**செய்தி வெளியீடு: தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு துறை, சென்னை – 84**




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு முதன்மைச் செயலர் முனைவர். ராஜேந்திர குமார், இ.ஆ.ப. அவர்கள் வீரர்கள் மற்றும் வீராங்கனைகளின் அணிவகுப்பு மரியாதையினை ஏற்று போட்டிகளை துவக்கி வைத்தார்கள்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு முதன்மைச் செயலர் முனைவர். ராஜேந்திர குமார், இ.ஆ.ப. அவர்கள் கையுந்து பந்து வீரர்கள் மற்றும் வீராங்கனைகளின் அறிமுகம் ஏற்று போட்டிகளை துவக்கி வைத்தார்கள். உடன் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய முதன்மை செயலர்/உறுப்பினர் செயலர். திரு அசோக் டோங்ரே இ.ஆ.ப. அவர்கள்



மாண்புமிகு பள்ளிக் கல்வி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள் டேக்வாண்டோ விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கான விளையாட்டு போட்டிகளை துவக்கி வைத்தார்கள்.



மாண்புமிகு பள்ளிக் கல்வி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கான விளையாட்டு போட்டிகளை துவக்கி வைத்தார்கள்.




மாண்புமிகு பள்ளிக் கல்வி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கான கையுந்து பந்து விளையாட்டு போட்டிகளை துவக்கி வைத்தார்கள்.